8	7	Lankesh	Rs 650.00	Rs 77.00	Rs 727.00	Rs 50.00	Rs 677.00
9	8	Jagath	Rs 350.00	Rs 45.00	Rs 395.00	Rs 50.00	Rs 345.00
10	9	Suresh	Rs 200.00	Rs 123.00	Rs 323.00	Rs 50.00	Rs 273.00
11	10	Sagarika	Rs 150.00	Rs 432.00	Rs 582.00	Rs 50.00	Rs 532.00
12	11	Menaka	Rs 130.00	Rs 234.00	Rs 364.00	Rs 50.00	Rs 314.00
13	12	Gayan	Rs 455.00	Rs 265.00	Rs 720.00	Rs 50.00	Rs 670.00
14	13	Pabath	Rs 230.00	Rs 324.00	Rs 554.00	Rs 50.00	Rs 504.00
15	14	Hemash	Rs 160.00	Rs 245.00	Rs 405.00	Rs 50.00	Rs 355.00
16	15	Kanthi	Rs 150.00	Rs 320.00	Rs 470.00	Rs 50.00	Rs 420.00

Weekend Collection / Sheet2 / Sheet3

வரைபு 1

ஒவ்வொரு பிள்ளையினாலும் வார இறுதியிலே சேகரிக்கப்பட்ட பணத்தொகை தனித்தனியாக நிரல் வரைபிலே காட்டப்பட்டுள்ளது.



நிரல் வரைபொன்றை நிர்மாணித்தல்


படிமுறை 1 - சுட்டியின் உதவியுடன் B1:D16 வரையுள்ள கலவீச்சைத் தெரிவு செய்க.

படிமுறை 2 - தெரிவுப் பட்டையிலே Insert இலுள்ள நிரல் வரைபு கருவியின் மீது சொடக்குக.



படிமுறை 3 - பெறப்படும் பட்டியலிலிருந்து பொருத்தமான வரைபைத் தெரிவு செய்து, அதன்மீது சொடக்குக.


வரைபானது எப்போதும் தகவல் அடங்கிய பணித்தாளின் மீது நிர்மாணிக்கப் படுவதால், அதனை வரைபு விரிதாளிற்கு (Chart sheet) நகர்த்தல் வேண்டும். இதற்காக,



படிமுறை 1 - பணித்தாளின் மீது நிர்மாணிக்கப்பட்ட வரைபின் மீது சொடக்குக.

படிமுறை 2 - தெரிவுப் பட்டையிலே Design இலுள்ள "Move Quick Location" கருவியின் மீது சொடக்குக.

படிமுறை 3 - Move Chart சொல்லாடற் பெட்டியிலே New sheet → OK சொடக்குக.




படிமுறை 4 - வரைபுக்கு தலைப்பு இடுவதற்காக,

தெரிவுப் பட்டையிலே → Quick Layout தெரிவுசெய்க.

படிமுறை 5 - வரைபின் வர்ணத்தை மாற்றுவதற்கு Change colors இனைத் தெரிவுசெய்க.

வரைபு 2

ஒவ்வொரு பிள்ளையினாலும் சேகரிக்கப்பட்ட முழுத்தொகை சதவீதமாக வட்ட வரைபிலே காட்டப்பட்டுள்ளது.




வட்ட வரைபொன்றை நிர்மாணித்தல்

வட்ட வரைபை வரைவதற்காகத் தெரிவுசெய்யப்பட வேண்டிய தகவல் அடங்கிய கலவீச்சானது மாணவர் பெயரைக் கொண்ட கலவீச்சு (B1:B16) மற்றும் முழுத் தொகையைக் கொண்ட கலவீச்சு (E1:E16) ஆகும். இந்த கலவீச்சானது ஒன்றுடனொன்று தூரமாகவுள்ள நிரல்களிலே காணப்படுகிறது. அவை நிரல் B மற்றும் நிரல் E ஆகும். இந்த வெவ்வேறான கலவீச்சைத் தெரிவு செய்வோம்.

படிமுறை 1 - மாணவர்களின் பெயர் அடங்கிய கலவீச்சை (B1:B16) தெரிவு செய்க.

படிமுறை 2 - சாவிப்பலகையிலுள்ள Ctrl சாவியை அழுத்தியவண்ணம் முழுத் தொகையைக் கொண்ட கலவீச்சை (E1:E16) தெரிவுசெய்க.

படிமுறை 3 - தெரிவுப் பட்டையிலே Insert இலுள்ள வட்ட வரைபு கருவியின் மீது சொடக்குக.



படிமுறை 4 - பட்டியிலிருந்து பொருத்தமான வரைபைத் தெரிந்து அதன் மீது சொடக்குக.

படிமுறை 5 - வரைபை வேறு வரைபு விரிதாளிற்கு நகர்த்துக.

படிமுறை 6 - தேவையான வடிவமைப்புகளை மேற்கொண்டு பணித்தாளைச் சேமித்து, அதனை மூடிவிடுக.

ö\¯Ø£õk **2.10**



உம்மால் தயாரிக்கப்பட்ட வேறு தகவல்களை உபயோகித்து வரைபுகளை நிர்மாணிக்க.




கவனிக்குக : First term marks - 2 பணித்தாளிலுள்ள தகவல்களை உபயோகித்து வரைபுகளை வரைவதற்கு முன்னர் அதிலுள்ள சமூகமளிக்காத மாணவர் களுக்காகவும் புள்ளிகளை உள்ளீடு செய்க.

3 செய்நிரலை உருவாக்கல்



ö\ ¯Ø£õk 3.1

பாய்ச்சற் கோட்டுப்படத்தை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்கள் சரியா அல்லது பிழையா எனக் குறிப்பிடுக.



a) பாய்ச்சற் கோட்டுப் படத்திலே முதலில் செயற்படுவது தீர்மானம் 1 ஆகும்.
(சரி / பிழை)

b) கட்டளை 1, ஆனது தீர்மானம் ஒன்றினுள் செயற்படுத்தப்படுவதில்லை
(சரி / பிழை)

c) தீர்மானம் 1 ஆனது கட்டளை 1 இன் பின்னர் செயற்படும்
(சரி / பிழை)

d) கட்டளை 3 செயற்படுத்தப்படுவது தீர்மானம் 2 இல் மாத்திரம் தங்கியுள்ளது.
(சரி / பிழை)

e) கட்டளை 4 செயற்படுத்துவதற்கு தீர்மானம் 1 மற்றும் தீர்மானம் 2 போன்ற சந்தர்ப்பங்கள் இரண்டும் சரியாக அமைதல் வேண்டும்.
(சரி / பிழை)

f) தீர்மானம் யாதாயினும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் கட்டளை 1 மற்றும் வேறு ஒரு கட்டளை செயற்படுத்தப்படும்.
(சரி / பிழை)

தரம் 7 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் பாடநூலில் குறிப்பிடப்பட்டவாறு Scratch செய்நிரலை http://www.scratch.mit.edu மூலம் பெற்றுக் கொள்க.

ö\¯Ø£õk 3.2

பாடசாலை ஒன்றில் மெத்னா, கருணா, முதிதா, உபேக்ஷா என நான்கு இல்லங்கள் உள்ளதெனக் கொள்க. மாணவர்களை இந்த இல்லங்களுக்கு இணைப்பதற்கான பாய்ச்சற் கோட்டுப்படம் கீழே தரப்பட்டுள்ளது. இங்கு அனுமதி இலக்கத்தினை 4 ஆல் வகுத்து பெறப்படும் மீதியிலிருந்து இல்லமானது பின்வருமாறு தீர்மானிக் கப்படுகிறது.

மீதி	இல்லம்
0	மெத்னா
1	கருணா
2	முதிதா
3	உபேக்ஷா


அனுமதி இலக்கத்தை 4 ஆல் வகுக்கும்போது பெறப்படும் மீதி இங்கு மீதியாகக் கொள்ளப் படுகின்றது.

உதாரணம் - அனுமதி எண் = 342

```
      85
  4 | 342
      32
      --
       22
       20
       --
மீதி →  2
```

342 MOD 4 = 2

இதனடிப்படையில் குறித்த அனுமதி இலக்கங்களை உடையவர் முதிதா இல்லத்துக்கு இணைக்கப்படுவார்.



கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

1. மீதி சார்பாகப் பெறப்படட முடியாத பெறுமதி யாது?

   1) 0 2) 2 3) 3 4) 4

2. ''உபேக்ஷா'' இல்லத்துக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவரின் மீதி சார்பாக பொருத்தமான பெறுமதி யாது?

   1) 3 2) 2 3) 1 4) 0

3. இங்குள்ள நிபந்தனைகளின் எண்ணிக்கை யாது?

   1) 1 2) 2 3) 3 4) 4

பாடசாலையிலுள்ள சகல மாணவர்களையும் இல்லங்களுக்கு வகுப்பதற்கு வரையப்பட்ட பாய்ச்சற் கோட்டுப் படத்துக்கு அமைவாக உருவாக்கப்பட்ட Scratch செய்நிரலிலே இடைவெளிகளுக்கு கீழே தரப்பட்டுள்ள நிபந்தனைகள் உட்புகுத்தப்படும் விதத்தை அம்புக்குறி மூலம் தொகுத்துக் காட்டுக.






ö\ ¯Ø£õk 3.3



உமது பாடசாலையிலுள்ள மாணவர்களை இல்லங்களுக்கு வகுப்பதற்காக Scratch செய்நிரலைக் தயாரிக்குக.

ö\ ¯Ø£õk 3.4

1. கணினியை உபயோகித்து தரம் 9 மாணவர்களின் யாதேனும் 5 பாடப் புள்ளிகளை உள்ளிடுவதற்கான செய்நிரல் ஒன்றைக் கட்டியெழுப்புக.
2. கணினியை உபயோகித்து வாரத்திலுள்ள ஏழு நாட்களையும் உள்ளிடுவதற்கான செய்நிரலைக் கட்டியெழுப்புக. வார நாட்களைக் கொண்ட அணியை ‘‘Day’’ எனப் பெயரிடுக.
3. கீழே தரப்பட்டுள்ள Color என்றும் அணியைப் பயன்படுத்தி விடையளிக்க.




(i) மேலுள்ள Scratch செய்நிரல் செயற்படுத்தப்பட்ட பின்னர், அது மீள்வரும் தடைகளின் எண்ணிக்கை யாது ?


(ii) Color எனும் அணிக்காக உள்ளிடப்படும் வர்ணங்களின் எண்ணிக்கை யாது ?

4. கீழுள்ள செயற்பாடுகளுக்கு பொருத்தமான கட்டளையைத் தெரிவுசெய்து இணைக்க.

a) அணியிலுள்ள சகல மூலகங்களையும் அழித்தல்.




b) அணியிலுள்ள மூலகங்களின் எண்ணிக்கை



c) அணியிலுள்ள முதலாவது மூலகம்



d) அணிக்கு மூலகங்களை உள்ளிடல்



4 நுண்கட்டுப்படுத்திகளைப் பயன்படுத்தல்

ö\ ¯Ø£õk 4.1

அன்றாட வாழ்விலே உணரி/புலனி (Sensor) மூலம் தரவுகளைப் பெற்று நுண்கட்டுப்படுத்தி (Micro controller) ஆல் கட்டுப்படுத்தக்கூடிய விதத்தில் நிர்மாணிக்கப்பட்ட உபகரணங்களின் பட்டியலைத் தயாரிக்க.

உதாரணம்:

1. விவசாயப் பூமியிலே விலங்கு அல்லது நபரொருவர் நுழைவதை இனங்காணும் உபகரணம்.
2. யானைக் கூட்டம் கிராமங்களினுள் நுழைவதை இனங்காணும் உபகரணம்.

ö\ ¯Ø£õk 4.2

நுண்கட்டுப்படுத்தி மூலம் பெறப்படுகின்ற அனுகூலங்களைப் பட்டியல் படுத்துக.

ö\ ¯Ø£õk 4.3

செய்முறை 1 - micro:bit நிர்மாண அலகை கணினியுடன் இணைத்து, micro:bit Block Editor இனை பயன்படுத்தி கீழுள்ள தொகுதிகள் (Blocks) மூலம் குறிமுறைப்படுத்தலை மேற்கொள்க.

புதிய திரையொன்றைப் பெறும் நிலையில் இப்பகுதிச் சோடி காட்சிப்படும்.







Basic இலுள்ள Show string எனும் பகுதியைப் பெற்று அதனை On start என்பதுடன் தொடர்புபடுத்தி அதனை SRI LANKA என மாற்றுக.




Basic இலுள்ள pause எனும் பகுதியைப் பெற்று அதனை Show string உடன் தொடர்புபடுத்தி அதனை 2000 என மாற்றுக.



Basic இலுள்ள Show Number எனும் பகுதியைப் பெற்று Pause உடன் தொடர்புபடுத்தி அதனை 1 என மாற்றுக.



Basic இலுள்ள Show Icon எனும் பகுதியைப் பெற்று Forever உடன் தொடர்புபடுத்தி அதனை " √ " அடையாளமாக மாற்றுக.




மேலே உருவாக்கப்பட்ட கணினி குறிமுறைகளைத் தரவிறக்கம் செய்து micro:bit நிர்மாண அலகினுள் நுழைத்து அவற்றின் வருவிளைவுகளைப் பரிசீலனை செய்க.

செய்முறை 2 - micro:bit நிர்மாண அலகை தொடர்புபடுத்தி micro:bit Block Editor இனை பயன்படுத்தி கீழுள்ளவாறு Blocks பகுதியின் மூலம் குறிமுறைப்படுத்தலை மேற்கொள்க.


On start இனுள் show string என்பதைப் பெற்று அதனை Temperature and compass என மாற்றுக.




Input திரையிலே on button A pressed எனும் பகுதியைப் பெற்று அதனுள் show number எனும் பகுதியைப் பெற்றுக்கொள்க.




Input திரையிலே Temperature எனும் பகுதியைப் பெற்று அதனை show number இனுள் பெற்றுக் கொள்க.



Input திரையிலே on button A pressed எனும் பகுதியைப் பெற்று அதனை B என மாற்றுக. அதனுள் show number எனும் பகுதியைப் பெற்றுக்கொள்க. பின்னர் Input திரையிலே compass heading எனும் பகுதியைப் பெற்று அதனை show number எனும் பகுதியினுள் தொடர்புபடுத்துக.




Input திரையிலே on button A pressed எனும் பகுதியைப் பெற்று அதனை A + B என மாற்றுக. அதனுள் Basic திரையிலே clear screen எனும் பகுதியைப் பெற்றுக் கொள்க.



உருவாக்கப்பட்ட அனைத்து பகுதிகளும் கீழுள்ளவாறு காட்சிப்படும்.

கீழுள்ள குறிமுறையை தரவிறக்கம் செய்து micro:bit நிர்மாண அலகினுள் நுழைத்து, A மற்றும் B பொத்தான்களை (Button) வெவ்வேறாக்கவும் ஒரே தடவையிலும் அழுத்துவதன் (Press) மூலம் வருவிளைவை பரிசீலனை செய்க.





ö\ ¯Ø£õk 4.4

Arduino பலகையிலுள்ள நுண்கட்டுப்படுத்தி (Chip) இனுள் தரவுகளை உள்ளீடு செய்தல்.

இதற்காக கீழுள்ளவாறு Arduino பலகையை கணினியுடன் இணைத்து Arduino எனும் செய்நிரலாக்க மொழியை (Programming language) பயன்படுத்தி உருவாக்கப்பட்ட குறிமுறையை Arduino பலகையிலுள்ள நுண்கட்டுப்படுத்தி (Microcontroller Chip) இனுள் உள்ளீடு செய்க.

Arduino எனும் செய்நிரலாக்க மொழியானது திறந்த மூல மென்பொருள் (Open source software) என்பதால் அதனை தேவைக்கேற்ப மாற்றி அமைக்க பயனருக்கு வாய்ப்புண்டு.



கணினி மற்றும் Arduino பலகையினைத் தொடர்புபடுத்துகின்ற கடத்தியினை கருதும்போது அதில் ஓர் அந்தம் USB ஆகவும் மற்றைய அந்தம் Mini USB ஆகவும் உள்ளதை அவதானிக்கலாம், இங்கு USB அந்தத்தைக் கணினியுடனும் Mini USB அந்தத்தை Arduino பலகையுடனும் இணைத்துக் கொள்க.

Arduino Yuno பலகையிலே காணப்படுகின்ற நுண்கட்டுப்படுத்தி Chip ஆனது செய்நிரலாக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற மென்பொருளாகும்.

இதற்காக Arduino எனும் மென்பொருள் பயன்படுத்தப்படுவதுடன் அதனை www.arduino.cc எனும் இணையத்தளத்தின் மூலம் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். அதனைக் கணினியிலே நிறுவி திறக்கும்போது பின்வருமாறு காட்சிப்படும்.

```
void setup() {
  // put your setup code here, to run once:

}

void loop() {
  // put your main code here, to run repeatedly:

}
```


Arduino Yuno பலகையினை USB கம்பியின் உதவியுடன் கணினியுடன் இணைத்து, Arduino மென்பொருளைப் பயன்படுத்தி வகைகுறிக்கப்படுகின்ற குறிமுறையை Arduino Yuno பலகையின் முன் கட்டுப்படுத்தி Chip இனுள் தரவேற்றம் (Upload) செய்ய முடியும். இந்நிலையில் குறித்த குறிமுறைக்கேற்ப Arduino Yuno Board இல் உள்ள Pin இன் மூலம் குறித்த வருவிளைவு பெறப்படுகிறது.

ö\ ¯Ø£õk 4.5


கீழே தரப்பட்டுள்ளவாறு Arduino பலகையை மற்றைய சாதனங்களுடன் தொடுக்க.

படிமுறை 1 : LED மின்குமிழை இணைக்க.

இங்கு LED மின்குமிழானது பலகையின் GND மற்றும் 13 ஆவது துளைகளில் இணைக்கப்பட்டுள்ளது.




படிமுறை 2 : கீழே தரப்பட்டுள்ள உருவுக்கேற்ப PIR உணரி இனை இணைக்க.



இங்கு PIR உணரியிலே,

- GND துளையை பலகையின் Power பகுதியிலுள்ள GND உடன் இணைக்க.
- OUT துளையை Digital பகுதியிலுள்ள 8 ஆவது துளையுடன் இணைக்க.
- VCC துளையை பலகையின் Power பகுதியிலுள்ள VCC உடன் இணைக்க.

Arduino மென்பொருளிலே கீழுள்ளவாறு குறிமுறையை தயாரித்து அதனை தரவேற்றம் செய்க. இந்நிலையில் நிகழும் செயற்பாட்டை அவதானிக்க.





```
void setup(){
  pinMode(8,INPUT);
  pinMode(13,OUTPUT);
}
void loop(){
  Int val=digitalRead(8);

If(val= =1){
  digitalWrite(13,HIGH);
  }
else{
  digitalWrite(13, LOW);
  }
}
```

ö\¯Ø£õk 4.6

கீழுள்ளவாறு Arduino பலகையை அலார உணரியுடன் இணைக்க.



இங்கு அலார உணரியிலே,

- GND துளையை பலகையின் Power பகுதியிலுள்ள GND உடன் இணைக்க.
- TRIGGER துளையை பலகையின் Digital பகுதியிலுள்ள 2 ஆவது துளையுடன் இணைக்க.
- ECHO துளையை பலகையின் Digital பகுதியிலுள்ள 4 ஆவது துளையுடன் இணைக்க.
- VCC துளையை பலகையின் Power பகுதியிலுள்ள 5V உடன் இணைக்க.
- LED மின்குமிழை பலகையின் GND மற்றும் 13 ஆவது துளைகளுடன் இணைக்க.

பலகையை கணினியுடன் இணைத்து கீழே தரப்பட்டுள்ளவாறு குறிமுறையை தட்டச்சிட்டு, அதனை பலகைக்கு தரவேற்றம் செய்க. இந்நிலையில் நிகழும் செயற்பாட்டை அவதானிக்க.




```
void setup(){
  Serial.begin(9600);
  pinMode(13,OUTPUT);
  pinMode(2,OUTPUT);
  pinMode(4,INPUT);
}

void loop(){
  long duration, distance;
  digitalWrite(2,HIGH);
  delayMicroseconds(100);
  digitalWrite(2,LOW);
  duration=pulseIn(4,HIGH);
  distance=(duration/2)/29;
   delay(10);
if((distance<=10))
{

   digitalWrite(13,HIGH);
}
else if(distance>10)
{

   digitalWrite(13,LOW);
}

}
```

Distance = (duration/2)/29

இதன்மூலம் தடை மற்றும் உணரிக்கு இடைப்பட்ட தூரம் சென்ரிமீற்றரில் பெறப்படும்.

5 கணினி வலையமைப்பாக்கம்

ö\ ¯Ø£õk 5.1

பாடசாலையின் கணினி வலையமைப்பின் பிரதான பாகங்களை இனங்காணல்

1. உங்கள் ஆசிரியர்/ ஆசிரியையின் உதவியைப் பெற்று பாடசாலையின் கணினிக் கூடத்தில் உள்ள கணினிகள் பற்றிக் கேட்டறிந்து வலையமைக்கப்பட்ட கணினிகள், சாதனங்கள் மற்றும் அவை தொடுக்கப்பட்டுள்ள விதம் பற்றி கவனத்திற் கொள்க.


2. கணினிக் கூடத்தின் கணினி வலையமைப்பில் உள்ள கணினிகள் மற்றும் சாதனங்கள் உள்ளடங்கிய பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

வன்பொருள்	இருக்கின்றதா என்பது பற்றி		எண்ணிக்கை	இணைக்கப்பட்டுள்ள முறை வடம்/ வடமற்ற	இடம்பெறும் கருமங்களை சுருக்கமாக விளக்குக
	உள்ளன	இல்லை			
கணினிகள்					
சேவையகக் கணினிகள்					
ஆளிகள்					
வழிப்படுத்திகள்					
அச்சுப் பொறிகள்					
வருடிகள்					
பல்லூடக எறியிகள்					
வேறு					

ö\ ¯Ø£õk 5.2



கணினி வலையமைப்பின் கணினிச் சாதனங்கள் தொடுக்கப்பட்டுள்ள விதத்தைக் காட்டும் குறியீடுகளைக் கொண்ட உரு கீழே காட்டப்பட்டுள்ளது.



தொடுக்கப்பட்டுள்ள வன்பொருள்கள் பற்றி கீழ்வரும் அட்டவணை விபரிக்கின்றது.

தொடுக்கப்பட்டுள்ளவை	குறியீட்டு முறை
கணினிகள் சில	C1, C2, C3…
ஆளி	S
வழிப்படுத்தி	R
அச்சுப்பொறி	P
இணையம்	I
சேவையகக் கணினி	SVR

உருவில் குறியீட்டினால் காட்டப்படும் வன்பொருள் இனங்களுக்குரிய குறிமுறையை அட்டவணைக்கு ஏற்றவாறு சரியான குறியீட்டின் மேல் எழுதுக.

ö\ ¯Ø£õk 5.3



கீழே தரப்பட்டுள்ள சொற்களுள் மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து 1 முதல் 10 வரையான கூற்றுகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

சேவையகக் கணினி, வடத்துடன் தொடுக்கப்படும், வலையமைப்பொன்று, வலையமைப்பாக்கம், நார் ஒளியியல், இணையம், கணினி வலையமைப்பு, தொடர்பாடல், வளம், சமூக வலையமைப்பு, வடத்துடன் தொடுக்கப்படாத, Wi-Fi, Pop messenger

1. கணினிகளை வளப்பகிர்விற்காகவோ அல்லது தகவல் தொடர்பாடலிற் காகவோ இணைக்குமிடத்து அது .... என அழைக்கப்படும்.
2. இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட கணினிகள் ஒன்றுக்கொன்று தொடுக்கப்பட்டு அமைக்கப்படும் அமைப்பு .... என அழைக்கப்படும்.
3. கணினிகள் வலையமைப்பாக்கப்படுவதற்கான பிரதான நோக்கம் .... மற்றும் .... பகிர்ந்து பயன்படுத்துவதாகும்.
4. .... உடன் கருமங்களை மேற்கொள்ள முடியுமாதல் கணினி வலையமைப்பினால் கிடைக்கும் அனுகூலமாகும்.
5. கணினி வலையமைப்பு தொடுக்கப்படும் ஊடகங்கள் இருவகைப்படும். அவை .... ஊடகம் மற்றும் .... ஊடகமாகும்.
6. .... தொழினுட்பம் வடத்துடன் அற்ற கணினி வலையமைப்பினுள் பயன்படுத்தப்படும்.
7. .... மூலம் வலையமைப்பில் உள்ள பயனர்களுடன் தொடர்பாடலை மேற்கொள்ளலாம்.
8. .... வலையமைப்பில் ஏனைய கணினிகளுக்கு பல்வேறு சாதனங்களை இடைமுகப்படுத்துவதற்கும் அச்சுப்பொறி, கோப்புகள், மென்பொருள் போன்றவற்றைப் பகிர்ந்து பயன்படுத்துவதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதாகும்.
9. நவீன தனியாள் கணினி பணிசெயல் முறைகளில் .... க்குத் தேவையான வசதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
10. .... கணினி வலையமைப்பின்போது தொடுக்கும் ஊடகம் ஒன்றாக பயன்படுத்தப்படும்.

ö\ ¯Ø£õk 5.4



பின்வரும் அட்டவணையில் A நிரலிலுள்ள ஒவ்வொரு கூற்றுக்கும் பொருத்தமான கூற்றுகளை B நிரலிலிருந்து தெரிவுசெய்து அந்தக் கூற்றின் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள இடைவெளிகளில் எழுதுக.

A	B	
1. RJ - 45	ஆளி	....
2. கணினி வலையமைப்பாக்கத்தின் பிரதான நோக்கமாகும்.	முறுக்கிய கம்பிச் சோடி	....
3. கட்டளைக் கோட்டு இடைமுகம் (Command Line Interface)	தமக்கு முக்கியமான தகவல்களை இணையத்தில் தேக்ககமாக (Storage) தேக்கி வைப்பதற்கான திறன்	....
4. வலையமைக்கப்பட்ட கணினிகள் மற்றும் ஏனைய சாதனங்களுக்கிடையில் நேரடி மற்றும் வினைத்திறனான தொடர்பாடலை மேற்கொள்ள இடமளித்தல்	கணினி வலையமைப்பொன்று ஏனைய கணினி வலையமைப் பொன்றுடனோ அல்லது இணையத்துடனோ தொடுக்கப்படல்	....
5. Bluetooth	நார் ஒளியியல்	....
6. வலையமைப்பொன்றில் மையப்படுத்தப்பட்ட வளங்கள் (Resources) மற்றும் சேவைக் கான அணுகலை (Access) வழங்கும் கணினி	வடத்துடனான வலையமைப்பு ஊடகமாகப் பயன்படுத்தப்படும் கம்பி தொடுக்கப்படும் முறை	....
7. கணினி வலையமைப்பின்போது தொடுக்கப்படும் ஊடகமாக பயன்படுத்தப்படும்.	தொடர்பாடல்	....
8. வழிப்படுத்தி	வலையமைப்பில் செய்திகளை அனுப்புவதற்குப் பயன்படுத்தப்படும்	....
9. கணினி வலையமைப்பாக்கத்தினால் கிடைக்கும் ஓர் அனுகூலம்	சேவையகக் கணினி (Server)	....
10. துரித கதியில் தரவுகளை ஊடுகடத்துவதற்குப் பயன்படுத்தப்படும் வடம்	வடமற்ற கணினிச் சாதனங்களைப் பயன்படுத்தப்படும்	....

ö\¯Ø£õk 5.5



கோப்புறையைப் பகிர்ந்து பயன்படுத்தல்

- உமக்கு நண்பர்களுடன் பரிமாறவேண்டிய பாடங்கள், படங்கள், உருவங்கள், பாடல்கள், காணொளி போன்றவற்றைப் பகிர்ந்து பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பமொன்றை எழுதுக.
- இச் செயற்பாட்டிற்காக முதன் முதலில் நாம் பிரதான தேக்ககத்தில் C செலுத்தி (Drive) இல் "Students Files" எனும் பெயரில் கோப்புறையைத் தயாரித்தல். (இக்கோப்புறைக்காக நீங்கள் விரும்பும் பெயரைப் பயன்படுத்தலாம்) வலையமைப்பில் பகிர்ந்து பயன்படுத்தும் படங்கள், உருவங்கள், பாடல், காணொளி ஆவணங்கள் போன்ற கோப்பு வகைகள் சிலவற்றை இக்கோப்புறைக்குள் நகல் செய்து கொள்க.




கவனிக்க - இச்செயற்பாட்டிற்கு நிர்வாகக் கணக்கு (Administrator Account) ஊடாக கணினி வலையமைப்பினுள் உள்நுழைதல் (Login) வேண்டும். பெரும்பாலும் உமக்கு வழங்கப்பட்டுள்ள கணக்கு மூலம் சில நிறுவமைப்பிற்கு (Settings) அனுமதி வழங்கப்பட மாட்டாது. எனவே ஆசிரியரினால் இப்பிரயோக செயற்பாடு முன் உதாரணமாக செய்து காட்டப்படும்.


இச்செயற்பாட்டிற்கு Windows 10 பணிசெயல் முறைமை பயன்படுத்தப் பட்டுள்ளது.

- இப்போது நீங்கள் தயாரித்த "Students Files" கோப்புறையை கணினி வலையமைப்பில் பகிர்ந்து பயன்படுத்தக்கூடிய வகையில் தயாரித்துக் கொள்வோம்.
- இதற்காக பணிசெயல் முறையில் செய்ய வேண்டிய நிறுவமைப்பு (Settings) செய்வதற்காக பின்வரும் படிமுறைகளைக் கையாளவும்.


படிமுறை 1 - "Control Panel" ஐ திறந்து அதிலுள்ள "Network and Sharing Centre" மீது சொடக்குக.




படிமுறை 2 - "Change advanced sharing settings” மீது சொடக்குக.




படிமுறை 3 - கோப்பு மற்றும் அச்சுப்பொறியைப் பகிர்ந்து கொள்வதற்குத் தேவையான பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ள மாற்றுத் தெரிவை மேற்கொள்க.




படிமுறை 4 - தற்போது உங்களது கணினியில் C செலுத்தியைத் தெரிவு செய்து அதில் உள்ள "Students Files" கோப்புமுறையை தெரிவு செய்வதற்குப் பின்வரும் படிமுறைகளைக் கையாள்க.




படிமுறை 5 - C செலுத்தியில் உள்ள "Students Files" கோப்புறையின் மீது Right Click செய்து Properties என்பதை சொடக்குக.




படிமுறை 6 - Sharing இல் Share பொத்தனின் மீது சொடக்குக.



படிமுறை 7 - தெரிவு Everyone ஐ தெரிவுசெய்து Share மீது சொடக்குக.



படிமுறை 8 - பெறப்படும் சொல்லாடற் பெட்டியில் Done மீது சொடக்குக.



- நீங்கள் "Students Files" கோப்புறையைப் பகிர்ந்து கொண்டு (Sharing) விட்டீர்கள்! இப்போது அந்த கோப்புறையினுள் உள்ள ஏதாவது ஒரு வகையான கோப்பொன்றை வலையமைப்பினுள் உள்ள எல்லா பயனர்களுக்கும் அணுகக்கூடிய வாய்ப்பு உண்டு.
- இதனால் கோப்புறையினுள் உள்ள ஏதாவதொரு வகையான கோப்பை பகிர்ந்து பயன்படுத்த முடியும். அதேபோல் ஏதேனும் ஒரு பயனருக்கு புதிய கோப்பொன்றை கோப்புறையினுள் நகல் செய்ய முடியும்.

ö\ ¯Ø£õk 5.6



அச்சுப்பொறியொன்றைப் பகிர்ந்து பயன்படுத்தல்


- அச்சுப்பொறியைப் பகிர்ந்து பயன்படுத்தி வலையமைப்பிலுள்ள ஏதேனும் ஒரு பயனருக்கு தமது கணினியில் உள்ள ஆவணமொன்றை அதிலிருந்து அச்சுப்பொறிக்கு அனுப்பி அச்சிட்டுக் கொள்ள முடியும். இதற்காக அச்சுப்பொறியை பகிர்ந்து கொள்வதற்குரிய அமைவடிவாக்கம் (Configure) செய்து கொள்ள வேண்டும்.
- கோப்புறையைப் பகிர்ந்து பயன்படுத்தும் செயன்முறையில் செய்த முதல் மூன்று படிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் நீர் முன்னர் செய்த செயன்முறைகளில் இப்படிமுறைகளை மேற்கொள்ளாததால் அப்படிமுறைகள் மூன்றையும் மீண்டும் செய்வது அவசியமற்றது.
- அதன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய புதிய சில படிமுறைகள் மாத்திரமே கீழே தரப்பட்டுள்ளன.




கவனிக்க : இச்செயற்பாட்டிற்காக நிர்வாகக் கணக்கு (Administrator Account) உடன் கணினி வலையமைப்புக்கு உள்நுழைதல் (Login) செய்ய வேண்டும். ஆசிரியரினால் இச்செயற்பாடு முன் உதாரணமாக உமக்கு செய்து காண்பிக்கப்படும்.

- அச்சுப்பொறி வலையமைப்பில் உள்ள சகலருக்கும் பகிர்ந்து பயன்படுத்தும் விதத்தில் நிறுவமைப்பு (Setting) செய்வோம். இதற்காக பணிசெயல் முறைமையினுள் செய்ய வேண்டிய வடிவமைப்பு செய்வதற்காகப் பின்வரும் படிமுறைகளை பின்பற்றுக.


படிமுறை 1 - Control panel இற்குச் சென்று Devices and Printers மீது சொடக்குக.




படிமுறை 2 - உங்களுக்குக் காண்பிக்கப்படும் சாதனங்களுள் வலையமைப்புடன் தொடுக்கப்பட்டுள்ள அச்சுப்பொறியினைத் தெரிவுசெய்து அதன் மீது Right click செய்க. அப்போது கிடைக்கும் பட்டியலில் Printer properties மீது சொடக்குக.



படிமுறை 3 - உங்களுக்குக் கிடைக்கும் சொல்லாடற் பெட்டியில் (Dialog box) Sharing மீது சொடக்குக.



படிமுறை 4 - உங்களுக்குக் கிடைக்கும் சொல்லாடற் பெட்டியில் Share this printer இற்குரிய அடையாளப் பெட்டியைத் புள்ளியிட்டு OK பொத்தானின் மீது சொடக்குக.




மேற்கூறிய படிமுறைகளின் பின் அச்சுப்பொறியைப் பயன்படுத்தத் தேவையான நிறுவமைப்பு (Settings) செய்யும் கருமம் நிறைவடைந்துள்ளதால் வலையமைப்பில் உள்ள சகலருக்கும் நீர் தெரிவுசெய்த அச்சுப்பொறியைப் பகிர்ந்து பயன்படுத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

ö\¯Ø£õk 5.7


கணினி வலையமைப்பினைப் பயன்படுத்தி தொடர்பாடலை மேற்கொள்ளல்.

- கணினி வலையமைப்பிலுள்ள பயனர் ஒருவருக்கு அவ்வலையமைப்புடன் தொடுக்கப்பட்டுள்ள வேறு ஒருவருக்கு வலையமைப்பினூடாக செய்தி ஒன்றை அனுப்ப முடிவதோடு அப்பயனரிடமிருந்து செய்தி ஒன்றைப் பெறுவதற்கும் முடியும். இச்செயற்பாட்டில் ஈடுபடும்போது பணிசெயல் முறைமையின் கட்டளைக் கோட்டு இடைமுகத்தைப் (Command Line Interface) பயன்படுத்தி செய்தி அனுப்பும் முறையிலாகும்.
- Windows10 பணிசெயல் முறைமையின் கட்டளைக் கோட்டு இடைமுகத்தைப் பயன்படுத்தி வலையமைப்பிலுள்ள நண்பனுக்கு "Hello, how are you?" எனும் செய்தியை அனுப்பும் முறையைக் கவனிப்போம்.
- "Hello, how are you?" எனும் செய்தி Student 1 எனும் பெயரில் வலையமைப்பிற்கு உள்நுழைதல் (Login) உள்ள நண்பன் ஒருவருக்கு அனுப்புவோம். இதற்காக கீழே தரப்பட்டுள்ள படிமுறைகளைக் கையாள்வோம்.


படிமுறை 1 - முதலில் உங்கள் கணினியின் பணிசெயல் முறைமை கட்டளைக் கோட்டு இடைமுகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். இதற்காகப் பின்வரும் படிமுறைகளை கையாளுங்கள். Windows பணிசெயல் முறைமையில் Start பொத்தான் மீது Right click செய்க. பின்னர் பெறும் பட்டியலில் Run மீது சொடக்குக.



படிமுறை 2 - உங்களுக்குக் கிடைக்கும் சொல்லாடற் பெட்டியில் (Dialog box) Open என்பதற்கு முன்னால் "cmd" எனத் தட்டச்சிட்டு OK பொத்தானைச் சொடக்குக.



தற்போது உங்களுக்கு கீழே குறிப்பிட்டவாறு கட்டளைக் கோட்டு இடைமுகம் கிடைக்கும்




உங்களுக்குக் கிடைக்கும் கட்டளைக் கோட்டு இடைமுகத்தில் "msg" கட்டளையைத் தட்டச்சிட்ட பின்னர் செய்தியைப் பெறும் பயனர் பெயரைப் பயன்படுத்தி உங்களின் செய்தியைக் குறிப்பிட்டு பின்னர் Enter சாவியை அழுத்தியவுடன் உங்களின் செய்தியை உரிய பயனருக்கு அனுப்பமுடியும். இவ்வாறு செய்தி அனுப்பும் முறை கீழுள்ள படிமுறைகளில் காட்டப்பட்டுள்ளது.


இங்கு "msg" கட்டளையையும் செய்தியைப் பெறும் பயனரின் பெயரையும் (User Name) சரியாகக் குறிப்பிடுவதற்கு நினைவில் கொள்க. நாம் இப்போது செய்தி ஒன்றை அனுப்பிப் பார்ப்போம்.

- நீங்கள் அனுப்பும் செய்தி "Hello, how are you?" மற்றும் செய்தியைப் பெறுனரின் பயனர் பெயர் "Student 1" எனக் கருதுக.
- இந்த msg கட்டளையைப் பயன்படுத்தும்போது செயற்படும் தொடரியல்: msg <User Name> "<message>" ஆகும். இதன்படி நீங்கள் கட்டளைக் கோட்டில் தட்டச்சு இடவேண்டியது msg Student 1 "Hello, how are you?" என்பதாகும்.
- கட்டளை, பயனரின் பெயர் மற்றும் செய்திக்கிடையில் இடைவெளி இட வேண்டுமென கவனத்திற் கொள்க.

படிமுறை 3 - கட்டளைக் கோட்டில் msg "Student 1 Hello, how are you? " என தட்டச்சிட்டு Enter சாவியை அழுத்துக.



உங்களின் செய்தி Student 1 பயனரின் கணினித் திரையில் பின்வருமாறு காட்டப்படும்.



ö\ ¯Ø£õk 5.8



வலையமைப்புடன் தொடுக்கப்பட்டுள்ள சகலருக்கும் ஒரே தடவையில் செய்தி ஒன்றை அனுப்புதல்

நீங்கள் இதற்கு முன்னரான செயற்பாட்டில் அனுப்பிய "Hello, how are you?" எனும் செய்தியை வலையமைப்பிலுள்ள சகலருக்கும் ஒரே தடவையில் அனுப்புவது எப்படி என இச்செயற்பாட்டின் மூலம் கற்போம்.

- இதற்காகப் பயன்படுத்துவது "msg" எனும் கட்டளையாகும்.
- செயற்பாட்டில் "msg" கட்டளையின் பெயர் செய்தியைப் பெறும் பயனரின் பெயர் "Student 1" என்பதாக உள்ளீடு செய்ததை நீங்கள் அறிவீர்கள்.
- எனினும் இச்செயற்பாட்டில் ஒருவரின் பெயருக்கு பதிலாக ‘‘எல்லோரும்’’ (All) எனும் கருத்தைத் தரும் "*" நட்சத்திர அடையாளமே (Asterisk) உள்ளீடு செய்யப்படும்.
- இதன்படி நீங்கள் கட்டளைக் கோட்டில் தட்டச்சு இடவேண்டியது msg * Hello, how are you? என்பதாகும்.
- இவ்வாறு சரியாகக் கட்டளைக் கோட்டு இடைமுகத்தில் (Command Line Interface) என தட்டச்சிட்டு Enter சாவியை அழுத்துக.
- உமது செய்தி, வலையமைப்புடன் தொடுக்கப்பட்டிருக்கும் சகல பயனர்களிற்கும் கிடைக்கப்பெறும். வெவ்வேறு செய்திகளிற்காக இச் செய்திக் கட்டளையைப் பயன்படுத்திப் பாருங்கள்.

குறிப்பு : இச்செயற்பாட்டிற்குப் பயன்படுத்தியது விண்டோஸ் 10 பணிசெயல் முறைமையாகும். நீங்கள் Windows 7 அல்லது அதற்கு முன்னரான பணிசெயல் முறைமையைப் பயன்படுத்துவதாயின் "msg" கட்டளைக்குப் பதிலாக "net send" எனும் கட்டளையைப் பயன்படுத்த வேண்டுமென்பதை நினைவிற் கொள்க.



6 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலும் சமூகமும்

ö\ ¯Ø£õk 6.1

மாணவர்களைக் குழுக்களாக வகுத்துக்கொள்க.

- உமது பாடசாலையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம், கணினி பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களையும் அதனால் பெறப்படுகின்ற சேவைகளையும் பட்டியல்படுத்துக. பெறப்பட்ட தகவல்களை மற்றைய குழுக்களுடனும் பரிமாற்றிக் கொள்க.

- நோயைக் கண்டுபிடிக்க பயன்படுத்தப்படுகின்ற சில உபகரணங்களும் அவை பயன்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை பொருத்தமானவாறு இணைக்க.

உபகரணம்	பயன்பாடு
	குருதி அமுக்கத்தை அளக்கும் உபகரணம் (Blood Pressure Testing Machine)
	மின் இதய வரையப் பொறி (ECG - Electrocardiogram Machine)
	கணினிப்படுத்திய உடலின் அச்சுப்படை பொறி (CAT)
	மின் மூளைய வரையியற் பொறி (EEG)
	குருதியிலுள்ள சீனியின் அளவை பரிசோதிக்கும் உபகரணம் (Blood sugar testing machine)

உம்மை சூழவுள்ள வேறு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பப் பிரயோகங்களை இனங்கண்டு பட்டியல்படுத்துக. அத்தரவுகளை பாடசாலையிலே பரிமாறிக் கொள்க.

ö\ ¯Ø£õk 6.2



இன்று உலகளாவிய ரீதியிலே ஏற்பட்டுள்ள இலக்கமுறை இடைவெளியை (Digital divide) இழிவாக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் யாவை?

ö\ ¯Ø£õk 6.3



இலத்திரனியல் கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் நிறுவனங்களின் பெயர்களை புத்தகங்கள், இணையம் அல்லது பெரியவர்களின் உதவியுடன் தகவல்களைப் பெற்று அட்டவணையைப் பூரணப்படுத்துக.

	நிலையம்	முகவரி	தொலைபேசி இலக்கம்
1			
2			
3			
4			
5			

ö\ ¯Ø£õk 6.4



மீள் பயன்படுத்தப்பட முடியுமான இலத்திரனியல் கழிவுகளை இனங்கண்டு, அவற்றை பட்டியல்படுத்துக.

ö\ ¯Ø£õk 6.5

கீழே தரப்பட்டுள்ள விடயங்கள் உண்மையா அல்லது பொய்யா என்பதை இனங்கண்டு குறித்த விடயத்துக்கு எதிரே எழுதுக.

1	அனைத்து இலத்திரனியல் கழிவுகளையும் மீள் பாவனைக்கு உட்படுத்த முடியாது.	
2	இலத்திரனியல் கழிவுகள் எமது சுற்றுச் சூழலை மாசடையச் செய்யும்.	
3	இலத்திரனியல் கழிவுகளால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு நாம் பொறுப்பாளிகள் அல்லர்.	
4	இலத்திரனியல் கழிவுகளை, குப்பைகளை சேகரிக்கும் நிலையங்களுக்கு வழங்குவதனால் சூழலைப் பாதுகாக்க முடியும்.	
5	இலத்திரனியல் கழிவுகளின் மூலம் பல்வேறு கண்கவர் பொருள்களை நிர்மாணிக்க முடியும்.	

ö\ ¯Ø£õk 6.6

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பம், கணினி சார்ந்த தொழில் வாய்ப்புகளைப் பத்திரிகை விளம்பரத்தின் உதவியுடன் தேடுக. அத்தரவுகளின் மூலம் பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

	தொழில்	தொழில் தருனர்	தேவையான தகுதிகள்	தொழில் கொள்பணி
1				
2				
3				
4				
5				

ö\ ¯Ø£õk 6.7

''கணினி சார்ந்த தொழில் வாய்ப்புகள்'' எனும் பாடத்தின் உதவியுடன் பொருத்தமான சொற்களை எழுதி இடைவெளிகளை நிரப்புக.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தி தமது வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்த திட்டமிட்டுள்ள வியாபாரி ஒருவர் அது சார்ந்த .... அறிவுரைகளைப் பெற்றுக் கொண்டார். வியாபார தேவைக்கான மென்பொருள் தயாரிப்பு .... மூலம் நடைபெறுவதுடன் அதன் தரமானது .... மூலம் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.
கண்கவர் விளம்பரமானது .... மூலம் நிர்மாணிக்கப்படுவது டன் தமது வியாபார செயற்பாடுகளை இணையத்தில் விளம்பரப்படுத்தவும் வியாபாரிக்கு தேவைப்படுகிறது. அதற்காக அவருக்கு .... உதவினார். வியாபார நிலையத்தின் அனைத்து வாகனங்களும் அலுவலகத்திலிருந்து கட்டுப்படுத்துவதற்கு தேவையானவாறு வியாபார நிலையமானது .... மூலம் வலையமைப்பாக்கப்பட்டுள்ளது.